KALAM -International Research Journal
Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka
Volume X Issue 1, 2016

# இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் நவீன இலக்கியத்தின் இடம்

**எம்.ஏ.எஸ்.எப்.ஸாதியா பௌஸர்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச் சுருக்கம்**

சமுதாய சூழழை அடியொட்டி எழும் நவீன இலக்கியங்களை இஸ்லாமியத் தமிழ் இலக்கியமாகக் கொள்ள முடியாது என பல ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்றால் என்ன என்பதை ஆராய முன், இஸ்லாம் என்றால் என்ன எனபதற்கான சரியான விளக்கம் அவசியம். இஸ்லாம் ஒரு பூரண வாழ்க்கைத் திட்டம். மனிதனின் பிறப்பு தொடக்கம் இறப்பு வரைக்குமான சகல விடயங்களுக்குமான வழிகாட்டல்களை அது வழங்கியுள்ளது. அதனை இரு பெரும் பிரிவுகளுக்குள் அடக்க முடியும். அதாவது, வணக்க வழிபாடுகளோடு தொடர்பான அம்சங்கள், சமூக வாழ்க்கையோடு தொடர்பான அம்சங்கள். இஸ்லாமியத் தமிழ் இலக்கியமாகக் கொள்ளப்படுகின்ற இலக்கியங்களில் வணக்க வழிபாடோடு தொடர்பான அம்சங்களும், சில இஸ்லாமிய வரலாறு தொடர்பான அம்சங்கள், நபிகளார், இறை நேசர்களாகக் கருதப்பட்டோர் முதலியோரின் புகழ் முதலிய விடயங்களே கருவாக அமைந்துள்ளன. அவற்றை மாத்திரம் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் எனக் கொண்டால் இஸ்லாமிய இலக்கியத்தின் எல்லையும் குறுகியதாகவே அமையும். அதேவேளை, இஸ்லாம் வழிகாட்டியுள்ள சமூக வாழ்வை முற்று முழுதாகப் புறக்கணித்ததாய் ஆகிவிடும். நவீன இலக்கியங்கள் முஸ்லிம்களில் சமூக வாழ்க்கை பற்றிப் பேசுகின்றன. அதனால் அவற்றையும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியமாகக் கொண்டால்தான் இஸ்லாமிய இலக்கியம் முழுமை பெறும். நவீன இலக்கியங்களும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியமாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதை போதிய ஆதாரங்களோடு நிறுவுவதே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வில் அல்குர்ஆன், நவீன இலக்கியங்கள் முதலியன முதலாம் நிலைத் தரவாகவும் இவ்வாய்வு தொடர்பாக எழுதப்பட்ட கட்டுரைகள் இரண்டாம் நிலைத் தரவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், சமூகவியல், ஒப்பீட்டு அணுகுமுறைகளும் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**Keywords:** இஸ்லாமியத் தமிழ் இலக்கியம், நவீன இலக்கியம்

**அறிமுகம்**

இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் எனும் போது இஸ்லாம், தமிழ், இலக்கியம் என்ற மூன்று அம்சங்கள் உள்ளடங்குகின்றன. அதாவது இஸ்லாத்தின் அடிப்படைகளான அல்குர்ஆன், ஹதீஸ் என்பனவற்றிற்கு முரண்படாத வகையில் தமிழ் மொழியில் எழுதப்படும் இலக்கியங்களையே இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என அடையாளப்படுத்த முடியும்.

"ஓர் இனத்தின் சமய, பண்பாட்டுக் கருத்துக்களைக் கருவாக அமைத்துப் பாடப்படும் இலக்கியங்கள அவ்வினத்திற்குரிய இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. இவ்வாறே இஸ்லாமிய தமிழ் இலக்கியமும் அமைந்து விடுகின்றது. அத்தகைய இலக்கியங்கள் தமிழ் மொழியில் தோன்றியுள்ளமையால்

அவற்றை இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் என அழைக்கின்றோம்.”[1]

ஓர் இனத்தின் சமய, பண்பாட்டு அம்சங்கள் ஒரு சமய இலக்கியத்தின் கருவாகக் அமையும் என்பதனையே ம.மு உவைஸின் இக்கூற்று விளக்கி நிற்கின்றது. பொதுவாக சமயம் எனும் போது மக்களுக்கு கடமையாக்கப்பட்ட வணக்க வழிபாடுகளையும் பண்பாடு எனும் போது அரசியல், பொருளாதாரம், கலைகள், கல்வி, சமூக நடவடிக்கைகள், ஒழுக்கங்கள் என அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கியதாக அமையும். வணக்க வழிபாடுகளோடு தொடர்பான அம்சங்களையும் சமூகம் சார்ந்த பல்வேறு அம்சங்களையும் கருவாகக் கொண்டமையும் இலக்கியங்களை இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் எனக் கொள்ள வேண்டும் என்பதே ம.மு. உவைஸின் கருத்தாக அமைந்துள்ளது. ஆரம்ப கட்டங்களில் வணக்க வழிபாடுகளோடு இஸ்லாமிய வரலாறு, இஸ்லாமியப் பெரியார்களாகக் கருதப்பட்டோரின் புகழ், அவர்களுடைய வாழ்க்கை முதலியவற்றைக் கருவாகக் கொண்ட இலக்கியங்களே தோற்றம் பெற்றுள்ளன. இவற்றை மாத்திரம் வைத்துக் கொண்டு இவ்வளவுதான் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்றோ அதன் வரையறை இவ்வளவுதான் என்றோ கருத முற்பட்டால், இஸ்லாமிய இலக்கியத்தின் கருப்பொருளும் மிகவும் குறுகியதொரு வட்டத்திற்குள் அமைந்துவிடும். இதனைக் கருத்திற் கொண்டே ம.மு. உவைஸூம் இஸ்லாமியப் பண்பாட்டை உள்ளடக்கி எழுதப்பட்டும் இலக்கியங்களையும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியமாகக் கொள்ள வேண்டும் எனக் கருதியுள்ளார். இஸ்லாமிய இலக்கிய வரலாறு ஆறாம் தொகுதியில் நவீன இலக்கியங்கள் பற்றி அவர் எழுதுவதற்கு இக்கருத்தியல் முக்கியதொரு காரணமாக அமைந்திருக்க வேண்டும்.

இஸ்லாம், மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரைக்குமான அனைத்து அம்சங்களையும் இவ்வாறுதான் செய்ய வேண்டும் என நெறிப்படுத்தியுள்ளது. அத்தோடு, மனிதனின் ஒவ்வொரு செயலும் இஸ்லாத்தின் வழிகாட்டலுக்கு ஏற்பவே அமைய வேண்டும் என எதிர்பார்க்கின்றது. இவ்வழிகாட்டல்களை மக்கள் இலகுவாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதற்காக இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் வணக்க வழிபாடுகளோடு தொடர்பான சட்டங்கள் (இபாதத்), சமூகம் சார்ந்த அம்சங்களோடு தொடர்பான சட்டங்கள் (முஆமலாத்) என இரண்டாகப் பிரித்துக் காட்டி விளக்கியுள்ளனர். வணக்க வழிபாடுகளோடு தொடர்பான விடயங்களில் எந்தவிதமான மாற்றங்களையும் மக்கள் விருப்பத்திற்கு ஏற்ப செய்ய முடியாது. முஆமலாத்தோடு தொடர்பான விடயங்களில் சந்தர்ப்ப சூழ்நிலைக்களுக்கு ஏற்ப சில மாற்றங்களை செய்ய முடியும். இவை முழு மனித வாழ்வையும் உள்ளடக்கியதாக உள்ளதை அவதானிக்கலாம். இறைவன் அல்குர்ஆனில்,

> “மனிதர்களையும் ஜின்களையும் என்னை வணங்குவதற்காக அன்றி படைக்கவில்லை”[2]

எனக் கூறியுள்ளான். இறைவனை வணங்குவதற்காகத்தான் மனிதன் படைக்கப்பட்டுள்ளான் என்பதன் அர்த்தம், இஸ்லாம் ஒரு முஸ்லிமின் முழு வாழ்க்கையும் வணக்க வழிபாடாகவே கருதுகின்றது. அதாவது இறைவனின் வழிகாட்டலுக்கு ஏற்பவே அனைத்துக் கடமைகளையும் மனிதன் செய்ய வேண்டும். ஒருவரின் பார்வை, பேச்சு, நடத்தைகள் என அனைத்திற்குமான வழிகாட்டல்கள் இஸ்லாத்தில் உள்ளன. அதில் ஒருபகுதியை ஏற்று மறுபகுதியை புறக்கணிப்பதற்கு இஸ்லாத்தில் இடமில்லை.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, மரபு சார்ந்த இலக்கியங்களையும் அரபு பாரசீக வழிவந்த இலக்கியங்களையும் மாத்திரம் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் எனக் கொள்வது இஸ்லாம் என்பதற்கான முழுமையான பொருளின் ஆழத்தை அளவிடாததன்

[1] உவைஸ், ம.மு., அஜ்மல்கான், பி.மு., ( ), இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி – I, தொடக்ககாலம் (கி.பி 1700 வரை), ப. 78

[2] (அல்குர்ஆன்: 51:56)

விளைவு என்றே கூற வேண்டும். வணக்க வழிபாடு சார்ந்த கடமை வேறு, சமூகம் சார்ந்த கடமை வேறு என இஸ்லாமியக் கடமைகளை வேறுபடுத்த முடியாது. ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தின் இஸ்லாமிய பண்பாடுகள் இஸ்லாமிய இலக்கியத்தின் மூலம் பிரதிபலிக்கப்பட வேண்டும். சங்ககால சமூகத்தின் அரசியல், பொருளாதாரம் முதலிய மொத்த பண்பாட்டினையும் சங்க இலக்கியங்கள் சித்திரிப்பது போல முஸ்லிம்களின் அரசியல், பொருளாதாரம், வாழ்க்கை முறை என மொத்தப் பண்பாட்டையும் அல்குர்ஆன், ஹதீஸ் என்பனவற்றிற்கு முரண்படாத வகையில் இஸ்லாமிய இலக்கியங்கள் பிரதிபலிக்க வேண்டும். அவ்வாறு அமையும் இலக்கியங்களே முஸ்லிம் சமூகத்தின் முதுசொமாக அமையும். றமீஸ் அப்துல்லாஹ் அவர்கள் தமது " இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் - சில குறிப்புகள்'' எனும் கட்டுரையில்;

> ''சை. பாத்தும்மா பீவி அவர்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் தொடர்பான தனது கட்டுரையொன்றில், இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தினை மரபுவகை இலக்கியம், புதுவகை இலக்கியம் என்று பிரித்திருக்கின்றார். மரபுவகை இலக்கியத்தினுள் காப்பியம், சிற்றிலக்கியம், ஞானப்பாடல்கள், பொது மக்கள் பாடல்கள் என்பவை அடங்கியுள்ளன. புதுவகை இலக்கியத்தினுள் படைப்போர், முனாஜாத்து, கிஸ்ஸா, மஸ்அலா, நாமா என்பன அடங்கியுள்ளன. தற்காலத்தைப் பொறுத்தவரையில் இந்தப்பகுப்பு முறை போதாததாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.''[3]

எனக் கூறியுள்ள கருத்தும் நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். மேலும் கா.சிவத்தம்பி, நவீன இலக்கிய வடிவங்களான நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் முதலிய இலக்கிய வடிவங்களை இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் எனக் கொள்ள முடியாது என பின்வருமாறு கூறியுள்ளார்,

> " எழுத்தின் அடிப்படைப் பண்பு பற்றி முஸ்லிம் ஒருவர் எழுதியது என்பதற்காக ஓர் ஆக்கம் முஸ்லிம் இலக்கியம் ஆகிவிடாது என்பதை நாம் உணர வேண்டும். நவீன இலக்கிய வடிவங்களுட் கணிசமான முக்கியத்துவத்தைப் பெறும் நாவல், சிறுகதை, புதுக்கவிதை ஆகியன முற்றிலும் மதச்சார்பற்ற சூழலினடியாகவே தோன்றுகின்றன என்பதை மனங்கொள்ளல் வேண்டும்.''[4]

றமீஸ் அப்துல்லா அவர்கள், நவீன இலக்கியங்களில் இஸ்லாமியக் கருத்துக்களும் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளும் பேசப்பட்டிருப்பதை ''இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் - சில குறிப்புகள்'' என்ற கட்டுரையில் தகுந்த எடுத்துக் காட்டுக்களுடன் முன்வைத்து கா.சிவத்தம்பியின் இக்கருத்தினை மறுதலித்திருப்பதோடு இவ்வாறான நவீன இலக்கியங்களை எவ்வாறான வகைப்பாட்டிற்குள் அடக்கமுடியும் என வினா எழுப்பியுள்ளார்.[5]

இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களாக வரையறை செய்யப்பட்டுள்ள இலக்கியங்களில் இஸ்லாத்திற்கு மாற்றமான, பொய்யும் கற்பனையும் கலந்த பல்வேறு கருத்துக்கள் காணப்படுகின்றன. அதேவேளை, அவ்விலக்கியங்கள் முஸ்லிம்களின் சமூக வாழ்க்கை பற்றி ஆழமாகப் பேசவில்லை. அவற்றில் பல்வேறு கருத்துக்கள் இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகளை தகர்த்தெறியக் கூடிய வகையில் அமைந்து காணப்படுகின்றன. இஸ்லாமிய இலக்கியம் என்று கூறும் போது அதில் வடிவத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க முடியாது. ஆனால், அதன் உள்ளடக்கம் இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுடன் முரண்படாத வகையில் அமைய வேண்டும். பொதுவாக இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் எனக்

[3] ஹனிபா, எஸ்.எம்.,(2001), மலை ஒளி, பக்.183
[4] சிவத்தம்பி,கா.,(1983), மதமும் மானிடமும்
[5] ஹனிபா, எஸ்.எம்.,(2001), மலை ஒளி, பக்.183-184

கொள்ளப்பட்டுள்ள இலக்கியங்களில் இஸ்லாமியக் கருத்துக்கள் அவற்றின் ஆழமான தாற்பரியங்களோடு பேசப்படுவது மிகவும் குறைவு. ஆனால் நவீன இலக்கியங்கள் மக்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன. உதாரணமாக புரட்சிக்கமாலின் ‘அவர்களும் நோன்புதான்’ எனும் கவிதையில் சாதாரணமாக நோன்பு முஸ்லிம்களுக்கு கடமை என்றும் அதனை செய்வதனால் நன்மை பயக்கும் என்றும் மாத்திரம் கூறிவிடாது, எதற்காக நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது, அவற்றின் தாற்பரியங்கள் என்ன முதலிய விடயங்கள் மிக அழகாக சித்திரிக்கப்பட்டுள்ளன. தவிர, கடமைக்காக இவற்றை நிறைவேற்றுவதில் எவ்வித பயனும் இல்லை என்பதைனையும் அக்கவிதை சித்திரிக்கின்றது. பித்தன் ஷாவின் ‘பாதிக்குழந்தை’ எனும் சிறுகதை பல கோணங்களில் நோக்கப்படவேண்டிய ஒரு கதையாகும். ஐம்பெரும் கடமைகளை நிறைவேற்றினால் ஒருவர் பூரண முஸ்லிமாகி விடலாம், சமூக வாழ்க்கையில் எவ்வாறான பாவங்களை செய்தாலும் அவற்றைப் பற்றி கணக்கெடுக்கத் தேவையில்லை என இஸ்லாத்தை பிழையாக விளங்கிக் கொண்டதன் விளைவை ஆசிரியர் இச்சிறுகதையில் எடுத்துக் காட்டியுள்ளார். ஐம்பெரும் கடமைகள்தான் இஸ்லாம் என பிழையாக இஸ்லாத்தை விளங்கிக் கொண்டவர்கள், வட்டி எடுத்தல், விபச்சாரம் செய்தல், ஏழைகளின் உழைப்பைச் சுரண்டுதல், அவதூறு சொல்லுதல், களவெடுத்தல், பொய் சொல்லுதல் என அனைத்து சமூகக் குற்றங்களையும் செய்து கொண்டு ஒவ்வொரு வருடமும் ஹஜ் கடமையை நிறைவேற்ற மக்காவுக்குச் செல்கின்றனர். மக்களுக்குச் செய்த பாவங்களுக்கு மக்கள் மன்னிக்காதவரை அல்லாஹ் மன்னிக்க மாட்டான் என இஸ்லாம் கூறுகிறது. பாவங்களில் மூழ்கிக் கிடந்த ஒருவர் ஹஜ்ஜுக்குச் சென்றால் தம் பாவங்கள் அத்தனையும் மன்னிக்கப்பட்டு விடும் என்ற தவறான புரிதல்களை விமர்சிப்பதாகவே பித்தன் ஷாவின் ‘பாதிக்குழந்தை’ எனும் சிறுகதை அமைந்துள்ளது.

இஸ்லாமிய இலக்கியம் முழுக்க முழுக்க பக்தி இலக்கியமாக இருக்க வேண்டும். அதில் அதில் காதல், கற்பழிப்பு, சமூக விரோதச் செயல்கள் எதுவும் சித்திரிக்கப்படக் கூடாது என்ற குறுகிய வட்டத்தை விட்டும் நீங்கி, நவீன இலக்கியங்கள் குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கான பின்புலங்களை மக்களுக்கு எடுத்துக் காட்டி, சமூகத்தை விளிப்படைய வைக்கின்றன. இஸ்லாம் கூறும் வரம்புகளை மீறும் போது ஏற்படக்கூடிய அவலங்களையும், சமூக விரோதச் செல்களையும் எடுத்துரைக்கின்றன். பொதுவாக அறியாமைக் காலத்தில் (இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்தில்) சமயப் பிரச்சாரத்திற்கான ஓர் ஊடகமாக கவிதை விளங்கியது. அதேபோல் மக்களை நல்வழிப்படுத்துவதற்கான ஒரு பிரச்சார உத்தியாக நவீன இலக்கியங்களும் காணப்படுகின்றன. கவிதையை விடவும் மக்களுக்கு அதிகமான செய்திகளை விளக்கமாக நாவல் சிறுகதைகள் மூலம் கூறமுடியும். நாவல், சிறுகதை, நாடகம் முதலியவற்றிலும் சமூகத்தில் தவறுகள் இடம்பெறுவதற்கான பின்புலம் எடுத்துரைக்கப்படுகின்றது. அதிலிருந்து ஒருவன் தன்னை எவ்வாறு மீட்டுக் கொள்கிறான் என்பதும் எடுத்துரைக்கப்படுகின்றது.

அல்குர்ஆனில் இடம்பெற்றுள்ள யூசுப் நபியின் வரலாறு ஒரு குறு நாவல் போன்று அமைந்துள்ளது. இதில் மன்னர் அஸீஸின் மனைவி யூசுப் நபி மேல் மோகம் கொள்வது, அவரைத் தவறான வழியில் ஈடுபடுத்த முயன்றது, இதனை அறிந்த அவ்வூர்ப் பெண்கள் அஸீஸின் மனைவியை தூற்றியது முதலான விடயங்கள் யதார்த்தபூர்வமாகக் கூறப்பட்டுள்ளன. அதேபோன்று, அதனால் யூசுப் நபி அடைந்த துன்பங்களும் அவர் நேர்வழியில் நடந்ததால் இறைவன் அவருக்கு அளித்த வெற்றியும் கூறப்பட்டுள்ளன. இப்பகுதியில் எந்தவொரு விடயமும் விரசமாகக் கூறப்படவில்லை. அதேவேளை யூசுப் நபியின் சகோதரர்கள் அவருக்கு இழைத்த அநியாயங்கள் கதை வடிவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்டத்திலும் அல்லாஹ் எவ்வாறு அவரைப் பாதுகாத்தான் என்ற விடயமும் கூறப்பட்டுள்ளது. யூசுப் நபியின் மகிமையைக் கூற முற்படும் போது

ஏனையோர் அவருக்கிழைத்த அற்பத்தன்ஙகளும் காட்டப்பட்டுள்ளன. இஸ்லாமிய இலக்கியம் படைப்போருக்கு அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ள கதைகள், வரலாறுகள் எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. வாசகர்களைக் கவர வேண்டும் என்பதற்காக விரசம் கலந்தும் உண்மைக்குப் புறம்பான கற்பனைகளை சேர்த்து எழுதப்பட்டுள்ள மரபு சார்ந்த இலக்கியங்களைவிட, மக்களிடையே அன்பு, மனிதநேயம், சகோதரத்துவம், சமத்துவம் முதலியவற்றை வளர்க்கும் வகையில் எழுதப்படும் நவீன இலக்கியங்களை இஸ்லாமிய இலக்கியங்களாகக் கொள்ள முடியும். சமூகத்திற்கு நல்ல விடயங்களை சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை எடுத்தியம்புவது இஸ்லாமிய இலக்கியத்தின் அடித்தளமாக அமைய வேண்டும்.

நவீன இலக்கியங்கள் பல்வேறு வகையிலும் இஸ்லாமியக் கருத்துக்களை தாங்கி நிற்கின்றன. இஸ்லாத்திற்கு மாற்றமான பல்வேறு கருத்துக்களை கொண்ட இலக்கியங்களை இஸ்லாமிய இலக்கியம் எனக் கொள்ளும் போது, இஸ்லாமிய உள்ளடக்கங்களோடு எழுதப்படுகின்ற நவீன இலக்கியங்களை இஸ்லாமிய இலக்கியமாகக் கொள்ள முடியாது என்பது ஏற்புடையதன்று. இஸ்லாம் பற்றிய பிழையான புரிதல்களின் வெளிப்பாடே, சமூகம் சார்ந்த விடயங்களை தள்ளி வைத்து விட்டு, இஸ்லாமிய இலக்கியத்திற்கு வரைவிலக்கணம் கூற முற்படுவதாகும்.

அல்குர்ஆன் 26 : 221 – 227 ஆம் வசனங்களை நோக்கும் போது, இஸ்லாம் இலக்கியங்களை அங்கீகரிக்கின்றது. வரவேற்கின்றது. உண்மையை, யதார்த்தத்தை வாழ்வின் இலட்சியத்தை எடுத்தியம்பும் இலக்கியங்களை இஸ்லாம் எதிர்க்கவில்லை. மாறாக உண்மைகளை விட்டுவிட்டு வெறும் கற்பனைப் புனைவுகளை, பொய்யாக இட்டுக்கட்டுவதனை வன்மையாகக் கண்டிக்கின்றது. இப்படிப்பட்ட கவிஞர்களை பொய்யர்களை ஷைத்தான்கள் அதாவது மக்களை வழிகெடுப்பவர்கள் என்றே கூறுகின்றது. நல்ல விடயங்களை ஏவி தீயவற்றைத் தடுத்தல் இஸ்லாத்தில் முக்கியதொரு பணியாகக் கொள்ளப்படுகின்றது. இது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகின்றது,

> “(நம்பிக்கையாளர்களே!) உங்களில் ஒரு கூட்டத்தார் (மனிதர்களை) சிறந்ததின் பக்கம் அழைத்து நன்மையைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களிலிருந்து அவர்களை விலக்கிக் கொண்டும் இருக்கவும். இத்தகையவர்கள்தாம் வெற்றி பெற்றவர்கள்”[6]

இவ்வத்தியாயத்தின் 110ஆவது வசனமும் இதே கருத்தை வலியுறுத்துகின்றது. இப்பணியை நேரடியான பிரச்சாரமாக மாத்திரமன்றி, நாவல், சிறுகதை, கவிதை, நாடகம் முதலிய நவீன இலக்கிய வடிவங்களுக்கு ஊடாகவும் செய்ய முடியும். முஸ்லிம் சமூகத்தில் புரையோடிப் போயுள்ள பல்வேறு பிரச்சினைகளையும் நவீன இலக்கிய வடிவங்கள் சித்திரிக்கின்றன. இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகள், அவை தொடர்பான சமூகக் கண்ணோட்டம், இறைவன், இறை நியதி, பிரார்த்தனை, இறைபுகழ், இறை நம்பிக்கை, நபிகளாரின் புகழ், நடைமுறைகள், இஸ்லாமிய வரலாற்றோடு தொடர்பான அம்சங்கள், இஸ்லாத்தை பிழையாக விளங்கிக் கொண்டமையால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், இஸ்லாமிய சட்டங்களைப் பின்பற்றாததால் ஏற்படும் சமூகக் குற்றங்கள், மறுமணம் தொடர்பான புரிதல்களும் சமூகத்தில் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளும், சீதனம், மஹர் தொடர்பான விடயங்கள், நீதி, சமூக நல்லிணக்கம், உறவுகளின் மேன்மை, சமூக அநீதிகளைக் கண்டித்தல், பொருளாதார சிந்தனைகள், அரசியல், சமூகத் தலைவர்களின் நிலை, சமூக அநீதிகள், மூடநம்பிக்கைகள் முதலியவற்றைக் கண்டித்தல், கல்வி நிலை, கற்ற சமூகத்தின் நிலை, முஸ்லிம் பெண்களின் பிரச்சினைகள், சமூகத்தை விளிப்புணர்வூட்டல், முஸ்லிம் சமூகத்திற்கு இழைக்கப்படும் அநியாயங்களுக்கு

[6] அல்குர்ஆன்: 3:104

எதிராகக் குரல் கொடுத்தல், முதலிய இன்னோரன்ன விடயங்களை நவீன இலக்கியங்கள் கருவாகக் கொண்டுள்ளன.

நவீன இலக்கியங்களை இவ்வாறான கருப்பொருள்களில் எழுதியது மாத்திரமின்றி, முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு பிறமொழிகளில் எழுதப்பட்டுள்ள இலக்கியங்களை தமிழில் மொழிபெயர்த்தும் உள்ளனர். அவ்வகையில் எம். ஏ. நு.ஃமானின் பலஸ்தீனக் கவிதைகளைக் கூறலாம். முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் பேசப்பட்டுள்ள நவீன இலக்கியங்களிலிருந்து ஒருசில விடயங்களை இங்கு குறிப்பிடுவது பொருந்தும்.

பித்தன் ஷாவின் "தாகம்" எனும் சிறுகதையில் இஸ்லாத்திற்கு மாற்றமான திருமணமுறை விமர்சிக்கப்படுகின்றது. அதாவது, செயினம்புவின் குடும்பம் ஓர் ஏழைக் குடும்பம். அவளுக்கு மாப்பிள்ளை பார்த்த போது, மாப்பிள்ளை செயினம்புவின் வீட்டார் தருவதாகக் கூறிய சீதனத்தை விட இரண்டு மடங்கு கூடுதலாகக் கேட்கிறான். அதனால் அத்திருமணம் நடைபெறாது பக்கத்து வீட்டு ருகியாவிற்கு அந்த மாப்பிள்ளை நிச்சயிக்கப்படுகின்றான். அவளுக்குத் திருமணம் நடைபெறும் போது செயினம்பு மிகவும் மன வேதனையோடு காணப்படுகிறாள். சமூகத்தில் இடம்பெறும் பிழையான நடைமுறையை மக்களுக்கு எடுத்துக் காட்டும் வகையிலும் மக்களின் சிந்தனையைத் தூண்டும் வகையிலும் செய்னம்புவின் கூற்றாக ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்,

> " 'மஹர் பணம் கொடுத்து பின்னர்தான் கணவன் என்ற உரிமையோடு ஒரு பெண்ணின் கையைப் பிடிக்க வேண்டும்' என்று குர்ஆன் கூறுவதாக ஹதீஸ் சொல்கிறார்கள். இது வெறும் பிரசங்கம் மட்டும்தானா? வாழ்க்கையில் நடைமுறைக்கு வர வேண்டாமா? குர்ஆனின் கோட்பாடுகளை வாழ்க்கையிலும் கடைப்பிடித்தாலென்ன?"[7]

சீதனக் கொடுமையால் இளம் பெண்கள் சீதனம் கொடுத்து திருமணம் முடிப்பதற்கு வசதியின்றி பல்வேறு வகையிலும் துன்பப்பட்டு கண்ணீர் விடுகின்றனர். இஸ்லாமிய வழிமுறையை நடைமுறைப்படுத்தினால் இந்தப் பிரச்சினை ஏற்படாது என்பதனையே ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார். சீதனம் தொடர்பாக அ.ஸ.அப்துஸ்ஸமத், ஜுனைதா ஷரீப், மருதூர் கொத்தன், சித்தி ரிஜா, முதலியோரும் புனைகதைகளை எழுதியதோடு புரட்சிக்கமால் முதலியோரின் கவிதைகளும் இதனை வன்மையாகக் கண்டிக்கின்றது.

அதிகமான சமூகக் குற்றங்கள் இடம்பெறுவதற்கு சமூக சூழல்தான் காரணமாகின்றது என்பதை இஸ்லாம் தெளிவாகக் கூறி, அவ்வாறான சூழல் ஏற்படாது தவிர்ப்பதற்கான வழிகாட்டலையும் வழங்கியுள்ளது. அவை பின்பற்றப்படாதபோது சமூகத்தில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் நவீன இலக்கியங்களில் ஆழமாக சித்திரிக்கப்பட்டுள்ளன. வீ.நூர்முஹம்மதின் 'தீக்கங்கு' எனும் சிறுகதையும் திக்வல்லைக் கமாலின் அதிகமான சிறுகதைகளும் இதற்கு சிறந்த சான்றுகளாகும்.

மேலும், பலதாரமணம் அல்லது மறுமணம் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள ஒரு விடயம். ஆனால், அதற்கான வரையறைகளை இஸ்லாம் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது. சமூகத்தில் அது தொடர்பாக இருக்கக்கூடிய சரியான, பிழையான புரிதல்களை பல கவிஞர்களும், நாவல், சிறுகதையாசிரியர்களும் தமது இலக்கியங்களினூடே புலப்படுத்தியுள்ளனர். அவ்வகையில், ஜின்னா ஷரிபுத்தீனின் 'மாற்றுவழி' எனும் சிறுகதையும், திக்வல்லைக் கமாலின் 'இரண்டு மணம் வேண்டும்' எனும் சிறுகதையும் சமூகத்தில் நிலவும் மறுமணம் தொடர்பான இரு

---

[7] ஷா, கே.எம்.எம், (1995), பித்தன் கதைகள், பக். 83-84

KALAM -International Research Journal
Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka
Volume X Issue 1, 2016

வேறுபட்ட சிந்தனைகளின் வெளிப்பாடுகளாக விளங்குகின்றன.

மேலும், சாணைக்கூறை இடும் முறை இஸ்லாமிய திருமண முறைக்கு மாற்றமான ஒன்றாகும். ஒரு திருமணம் ஆண், பெண் ஆகியோரின் விருப்பினைப் பெற்றே இடம்பெற வேண்டும் என இஸ்லாம் கூறுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக அனைத்து செயற்பாடுகளுக்கும் இறைவனின் நாட்டம் என்ற ஒன்றும் உள்ளது. இவற்றையெல்லாம் மீறி, குழந்தை பிறந்ததும் திருமணம் நிச்சயிக்கப்படுவது பிழையானதொரு வழிமுறை என்பதை ஜுனைதா ஷரீபின் சாணைக்கூறை எனும் நாவல் சித்திரிக்கின்றது.

மேலும், சாஸ்திரங்களும் மூடநம்பிக்கைகளும் ஆரம்பகாலம் தொடக்கம் மக்கள் மத்தியில் இருந்து வந்துள்ளதை நாம் இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம். இஸ்லாமும் இதனை வன்மையாகக் கண்டிக்கின்றது. இவை மனிதனின் அறிவியல் ரீதியான சிந்தனைகளுக்குத் தடைக்கல்லாக அமைவதோடு, மனிதனின் அன்றாட நடவடிக்கைகளுக்கும் இயல்பான இயக்கத்திற்கும் ஊறு செய்யும் வகையிலும் அமைந்துள்ளன. மனிதனின் பின்னடைவுக்கும் முக்கிய காரணங்களில் ஒன்றாக விளங்குகின்றது. இவற்றைக் கண்டித்து பெரும்பாலான முஸ்லிம் இலக்கியவாதிகள் இலக்கியங்களைப் படைத்துள்ளனர். இவ்வகையில் ஜுனைதா ஷரீப், திக்வல்லைக் கமால், புரட்சிக்கமால், ஜின்னா ஷரீபுத்தீன் எம்.ஏச்.எம் ஷம்ஸ் முதலியோரைக் குறிப்பிடலாம்.

ஜுனைதா ஷரீப், ஒவ்வாமுனைக் காந்தங்கள் எனும் நாவலினூடே சமூகத்தில் நிலவும் பல்வேறு மூட நம்பிக்கைகளையும் அதனால் ஏற்படும் விளைவுகளையும் சித்திரித்துள்ளார். கர்ப்பிணிப் பெண்களுக்கு ஏதும் நோய் ஏற்பட்டாலும் அதற்கு வைத்தியம் செய்யாமல் சுவாதம், பார்வை என மக்கள் நினைப்பது அவர்களது அறிவீனம், மூட நம்பிக்கை என்பதை வைத்தியர் எனும் பாத்திரம் மூலமும் ஆசிரியர் காட்ட முற்பட்டுள்ளதை பின்வரும் பகுதி விளக்குகின்றது,

'''உம் பொன்சாதிக்கு காசம். அதுவும் சரியா முற்றிப் போச்சு. எத்தனை நாளா இருமுறாங்க?'
'ரெண்டு மாதமா இருமலோடயே கயிறிழுத்த'
'நல்லா கதைக்கத் தெரியுது. ஏன் உடனேயே ஆஸ்பத்திரிக்கு கூட்டி வரல்ல'
'அத ஏன் கேக்கிறீங்க... இவங்க உம்மாக்காரி விடல்லீங்க. இவவுக்கு சுவாதமுன்னு நாட்டுப் பரிசாரிகிட்டயே காட்டச் சொன்னா...'
'ஏன் சூனியம்னு காய் வெட்டியிருப்பீரே?'
'அதையும் செய்யத்தான் சொன்னா. நான் இங்க கூட்டி வந்துட்டன்.'
டாக்டர் வாய் விட்டுச் சிரித்தார்.
'நீங்கள் எப்பதான் கல்வி கற்கப் போகிறீர்களோ? இந்த மடமையிலிருந்து மாறப்போகிறீர்களோ? அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம்'''[8]

இந்நாவலில் இவ்வாறு மக்களின் மடமையை ஆசிரியர் எடுத்துக்காட்டி, இவற்றின் பின் விளைவு மரணத்தில் சென்று முடிவடைவதை மதீனா எனும் பாத்திரத்தின் மூலம் காட்டியுள்ளார். இதனூடே சமூகத்தில் புரையோடிப் போயுள்ள பல்வேறு மூட நம்பிக்கைகளை எடுத்துக்காட்டி மக்களுக்கு விளிப்புணர்வூட்டுவதை அவதானிக்க முடியும்.

சமூகத்தில் பள்ளித்தலைவர்கள், பள்ளி வேலைகளைச் செய்யும் முஅத்தின்மார்கள் ஆகியோரின் உண்மையான நிலைமைகளை படம்பிடித்துக் காட்டுவதாய் புனைகதைகளும் கவிதைகளும், முஸ்லிம் நாடகங்களும் எழுதப்பட்டுள்ளன. இதற்கு உதாரணங்களாக திக்வல்லைக் கமாலின் சிறுகதைகளையும் புரட்சிக்கமாலின் கவிதைகளையும் கூறலாம்.

[8] ஜுனைதா ஷரீப் (1990) ஒவ்வாமுனைக் காந்தங்கள், ப.50

புரட்சிக்கமால், 'சாக்காட்டின் ஆளன்' எனும் கவிதையிலும், முஸ்லிம் சமூகத்தில் பள்ளிவாயில் வேலைகளைக் கவனிப்பவராக இருக்கக்கூடிய "முஅத்தின்" என்பவரைச் சமூகம் எவ்வாறான கண்ணோட்டத்தில் பார்க்கின்றது என்பதனையும் அவர் எவ்வாறு மதிக்கப்பட வேண்டும் என்பதனையும் வரலாற்றினை அடிப்படையாகக் கொண்டு விளக்கியிருப்பதோடு, முஅத்தின் என்பவர், யாருடைய வீட்டிலாவது மரணம் சம்பவித்தால், மரணச்சடங்குகளைக் கவனிப்பவராகவும் பின்னர் கத்தம்,பாத்திஹா என வரும் சடங்குகளைக் கவனிப்பவராகவுமே சமூகத்தில் மதிக்கப்படுகின்றார். அவர்களுக்கு கௌரவமாக வாழ்வதற்குரிய சம்பளத்தை வழங்குவதில்லை. அதனால் அவர்களது வீடுகளில் வறுமை தாண்டவமாடுகின்றது எனவும் கூறியுள்ளார். இதனை பின்வரும் கவிதைப் பகுதி சித்திரிக்கின்றது,

"ஒட்டிய கன்னமும்
ஒரு சோடிக் கந்தலும்
பட்டினி மனையுமே கொண்டான் - அவன்
அவன் பாத்திஹா கத்தமே கண்டான்!"

மேலும், இன்றைய பள்ளிவாயில் நிர்வாகிகள் பற்றிய புரட்சிக்கமாலின் விமர்சனம் பின்வருமாறு அமைந்துள்ளது,

"வீங்கிய செல்வத்தின்
விளக்கமாய் விண்பட
ஓங்கிய பள்ளியின் தொண்டன் - அவன்
ஊருக்குள் ஏழையின் சுண்டல்!
அவனையோர் மனிதனாய்
அணுகவும் கூசிடும்
அவலமே நிர்வாகம் புரியும் - முஅத்தின்
அழைப்பொலி ரஃமத்தா சொறியும்….."[9]

மற்றவர்கள் புகழ வேண்டும் என்பதற்காக மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதைக் கண்டித்தும் விமர்சித்தும் பலரும் புனைகதைகளையும் கவிதைகளையும் எழுதியுள்ளனர். அந்தவகையில் திக்வல்லைக் கமால், புரட்சிக்கமால், மருதூர் கொத்தன், ஜின்னா ஷரிபுத்தீன், ஜுனைதா ஷரீப், பித்தன் ஷா முதலியோரைக் குறிப்பிடலாம்.

முஸ்லிம் சமூகத்தில் மரபு ரீதியாகப் பின்பற்றப்பட்டுக் கொண்டு வரும் வழக்காறுகளை எடுத்துக்காட்டுவதாகவும் கண்டிப்பதாகவும் திக்வல்லைக் கமாலின் அதிகமான சிறுகதைகளும் எம். எச். எம் . ஷம்ஸின் கிராமத்துக் கனவுகள் நாவலும் , ஜுனைதா ஷரீபின் நாவல்களும் புரட்சிக் கமாலின் 'இஸ்லாத்தில் இல்லை', 'என்று மாயும்', 'திருநாள் பரிசு', முதலிய கவிதைகளும் அமைந்துள்ளன. ஒவ்வாமுனைக் காந்தங்கள் எனும் நாவலில் தலைப்பாத்திஹா ஓதுவது, அது தொடர்பான நம்பிக்கை பின்வருமாறு சித்திரிக்கப்பட்டுள்ளது,

"தலைப்பாத்திஹா ஓதுவதற்காக அழைத்த ஆலிம்கள் ஒவ்வொருவராக வரத்தொடங்கினர்….
"வாங்க ஆலிம் ஸாஹிப் வாங்க, வாங்க"
காசிமும் சொந்தக்காரர்களை வரவேற்றனர். திண்ணையோடு கூடிய உள்வீட்டினுள் மேலே ஓலைக் கூரையை மறைத்து வெள்ளை கட்டியிருந்தனர். கீழே பாய் விரித்து நடுவில் உப்பிய தலையணைகளை நீளப்பாட்டில் ஒன்றுக்கு அருகே மற்றையதை வைத்து பூ வேலைப்பாடுள்ள துப்பட்டியொன்றால் மூடி அதன் மேலே ஓத வேண்டிய கிதாபுகளை (புத்தகங்களை) வைத்திருந்தனர். ஓதும் போது கொறிப்பதற்காக மாதுளஞ் சுளைகளும், கற்கண்டும் சிறிய பாத்திரங்களில் காணப்பட்டன. மண் நிரம்பிய கிளாஸ் ஒன்றினுள் ஒரு கட்டு ஊதுபத்தி புகைவிட்டது, வாசனை அறைக்கு வெளியேயும் பரவியது…….

[9] புரட்சிக்கமால்,(1995), புதியதொனி, ப.29

“ஓதுங்க ஆலிம் சாஹிப்” குசினிக்குள் நின்று வெளியே வந்த காசீம் பச்சைக் கொடி காட்ட
“காசீம் உம் பொன்சாதியை இத நல்லா கேட்டுட்டு நிற்கச் சொல்லு. நபி பெருமானாரின் மகள் பாத்திமா நாயகியின் துஆ பரக்கத்தாலே உம் பொன்சாதியின் வயிற்றுச் சுமை எந்தப் பிரச்சினையும் இல்லாம கழன்றிடனும்னுதான் இத ஓதுவோம். எல்லாம் வல்ல அல்லாஹ் மிகப் பெரியவன். அப்போ ஓதத் தொடங்குவோம்”[10]

தலைப்பாத்திஹா ஓதியதால் மதீனாவுக்கு குழந்தை இலகுவாகப் பிறந்ததாக ஆசிரியர் இந்நாவலில் காட்டவில்லை. மக்களிடம் காணப்பட்ட மூட நம்பிக்கைகளில் ஒன்றாகவே ஆசிரியர் இந்நிகழ்வை சித்திரித்துள்ளார்.

சமூகத்தில் நிலவிவரும் முரண்பாடுகளையும் பல்வேறு சிக்கல்களையும் வாழ்க்கைப் போராட்டங்களையும் எடுத்துக் காட்டுவதாகவும் இனமுரண்பாட்டினால் ஏற்பட்ட சிக்கல்களை சித்திரிப்பதாயும் எம்.ஏ.நு.்.மான், அஷ்ரப் ஷிஹாப்தீன், ஏ.இக்பால், அறபாத், றஷ்மி, சதக்கா முதலியோர் கவிதைகளையும் அ.ஸ அப்துஸ்ஸமது, வை. அஹமத், முஹம்மது ஜெலீல், ஜுனைதா ஷரீப் முதலியோர் நாவல்களையும் அ.ஸ அப்துஸ்ஸமது, மருதூர் கொத்தன், ஏ.இக்பால், ஜின்னா ஷரிபுத்தீன், திக்வல்லைக் கமால், எஸ்.எல்.எம்.ஹனிபா முதலியோர் கதைகளையும் எழுதியுள்ளனர். முஸ்லிம்களுக்கு அரசியல் ரீதியாக இழைக்கப்படும் அநீதிகள் தொடர்பான விளிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒலுவில் பாயிஸால் எழுதப்பட்ட ‘வயலான் குருவி’ எனும் நாவலும் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

அல்குர்ஆனின் மகத்துவம், இறைபுகழ், நபிகளாரின் புகழ், நடைமுறைகள் முதலிய இன்னோரன்ன விடயங்களையும் நவீன இலக்கியங்கள் சித்திரிக்கின்றன. மு.மேத்தாவின் ‘நாயகம் ஒரு காவியம்’ இவ்வகையில் அடங்கும். ‘முஹம்மதுர் ரஸுல்லாஹ்’ எனும் தலைப்பில் அஷ்ரப் ஷிஹாப்தீன் எழுதிய கவிதையில் நபிகளார் காட்டிய வழியின் இயல்பு, அவற்றை மனிதன் புறக்கணித்து வாழ்வதால் ஏற்படும் விளைவுகள் முதலியவற்றைப் பின்வருமாறு சித்திரித்துள்ளார்,

“நபிகளார் நவின்றவை நவீன
கவிதைகளைப் போல
சிக்கலானவை அல்ல
நாட்டார் பாடல்களைப் போல்
நெஞ்சில் இனிப்பவை
முஹம்மத் காட்டிய நெறி
ரத்தம் சிந்தும் உலகிற்கு
சித்தம் மாற்றும் சிறந்த மருந்து
அதிலிருந்து விலகும் போதெல்லாம்
கத்தம் ஓதிக் கதறி அழுகின்றோம்.”[11]

அல்குர்ஆன் மகத்துவம் பற்றி புரட்சிக்கமாலின் கவிதைப்பகுதியும் இங்கு நோக்கத்தக்கது,

“ஆல்விதையின் துளைவூடே
இமயத்தை புதைத்திட்ட புதுமையன்ன
பாலினிய ஒரு சொல்லில்
பாரிடத்தை விண்கதிரை உடுவைக் காட்டும்
மாலினிய நூல் வடிவில்
மானிலத்தார்க்
கிறையளித்த பொற்குவையே! அழகே! உன்னை
சாலமகிழ்ந் தோதுகையில்
கண் வாய் நா
நெஞ்செல்லாம் களிப்பைச் செய்வாய்!”[12]

---

[10] ஜுனைதா ஷரீப் (1990) ஒவ்வாமுனைக் காந்தங்கள், ப.26

[11] அஷ்ர.்.ப் ஷிஹாப்தீன்(2008), என்னைத் தீயில் எறிந்தவள், ப.62

[12] புரட்சிக் கமால் (1962) புரட்சிக்கமால் கவிதைகள், ப.14

இஸ்லாமிய இலக்கியம் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் சுருங்கிவிடாது, முஸ்லிம்களின் முழு பண்பாட்டையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும். மரபு சார்ந்த இஸ்லாமிய இலக்கிய வடிவங்களையும் அரபு, பாரசீக வழிவந்த இலக்கிய வடிவங்களையும் மாத்திரம் வைத்துக் கொண்டு இஸ்லாமிய இலக்கியத்திற்கு விளக்கமளிக்க முற்பட்டால், இஸ்லாமியர்களின் சமூக வாழ்க்கையை முற்று முழுதாகப் புறக்கணித்து, இஸ்லாத்தின் ஒரு சிறு பகுதியை மாத்திரம் பார்த்ததாகவே இஸ்லாமிய இலக்கியம் அமையும். எனவே நவீன இலக்கியங்களையும் இஸ்லாமிய இலக்கியமாகக் கொண்டால் மாத்திரமே இஸ்லாமிய இலக்கியம் முழுமை பெறும். தற்போது மரபு சார்ந்த இலக்கிய வடிவங்களை பயன்படுத்தி இஸ்லாமிய இலக்கியங்களை எழுதுவோர் மிகக் குறைவு. இவ்வாறான சூழ்நிலையில், நவீன இலக்கியங்களை இஸ்லாமியத் தமிழ் இலக்கியமாகக் கொள்ளாவிட்டால், இஸ்லாமிய இலக்கியமும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குரிய இலக்கியமாக மாறிவிடும். அதனால், முஸ்லிம்களின் பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளையும் இஸ்லாம் கூறுகின்ற உயர் விழுமியங்களையும் மையமாகக் கொண்டு இஸ்லாமிய அடிப்படைக் கோட்பாடுகளுக்கு மாற்றமுறாத வகையில் எழுதப்படுகின்ற நாவல், சிறுகதை, கவிதை மற்றும் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பப்பட்ட நாடகங்கள் முதலியவற்றையும் இஸ்லாமித் தமிழ் இலக்கியம் என்றே கொள்ள வேண்டும்.